# மணப்பாறை நகராட்சி

**2017 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31.03.2017 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 31.03.2017 | **பொருள் எண் –1**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட செவலூர் கிராம புல எண் T.S.No. 41 (Old Survey No. 570/1-C) வார்டு D, பிளாக் 16 ல் ரிலையன்ஸ் JIO நிறுவனத்தால் செல்போன் கோபுரம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை உயர்நீதமன்ற மதுரை கிளையில் WP(MD) No.4346/2017 எண்ணின் படி திரு.மணிகண்டன் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.லாரன்ஸ், அரசு வழக்கறிஞர் ஆஜராவதற்கு வழக்கு கட்டணம் ரூ.7500/– (ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 0249 / 2017 / எப் 1 | **தீர்மானம் எண் .100**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 31.03.2017 | **பொருள் எண் –2**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட அப்புஅய்யர் குளம், கரிக்கான்குளம், வாகைக்குளம், அத்திக்குளம், மோர்குளம், முனியப்பன் குளம் போன்ற குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி திரு.எம்.சந்திரசேகர் என்பவர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் WP(MD) No.3816/2017 ல் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், வழக்கு 12.04.2017 அன்று இறுதி விசாரணைக்கு வர உள்ளதாகவும், வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி, வக்காலத்து பாராவாரி அறிக்கை தயார் செய்யவும் வழக்கு கட்டணம் ரூ.7500/– வழங்குமாறு மதுரை வழக்கறிஞர் திரு.ஜெ.லாரன்ஸ் அவர்கள் கேட்டுள்ளார்கள். மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 0188/2011/எப் 1 | **தீர்மானம் எண் .101**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 31.03.2017 | **பொருள் எண் –3**<br>நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்குள் கடை ஒதுக்கித் தரக்கோரி திரு.அப்துல்லா த/பெ முகமது உசேன் என்பவர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் WP(MD) No.4968/2017 ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்காடவும், வக்காலத்து பாரம் மற்றும் பத்திவாரியான | **தீர்மானம் எண் .102**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அறிக்கை தயார் செய்யவும் வழக்கு கட்டணமாக ரூ.7500/— வழங்குமாறு திரு.ஜெ.லாரன்ஸ் வழக்கறிஞர் கேட்டுள்ளார்கள். மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 0561/2017/அ2 | |
| 31.03.2017 | **<u>பொருள் எண் –4</u>**<br>***"திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016"***– ஐ இந்நகராட்சியில் செயல்படுத்த தேவையான துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டு அதனை தினத்தந்தி தமிழ் நாளிதழில் அறிவிக்கை செய்து 09.03.2017 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம், திருச்சிராப்பள்ளி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலமாக, பிரைட் அட்வர்டைஸ்மெண்ட், சென்னை நிறுவனத்தின் வழியாக செய்யப்பட்டது. இதற்கான விளம்பர செலவு தொகை ரூபாய் 62,822/— ஐ சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு (பிரைட் அட்வர்டைஸ்மெண்ட், சென்னை) வழங்கவும், தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்ததற்கும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 182/2017/எச் 1. | **தீர்மானம் எண் .103**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 31.03.2017 | **<u>பொருள் எண் –5</u>**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க, கொசுப்புழுக்கள் உருவாகும் இடங்கள் அழித்தல், அபேட் மருந்து கரைசல் ஊற்றுதல், முதிர் கொசுக்கள் ஒழிக்கும் புகை மருந்து அடித்தல் முதலிய பணிகளை மேற்கொள்ள, திருச்சி மாவட்ட மலேரியா அலுவலர் அவர்கள் 15 DBC பணியாளர்களை, திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக தினக்கூலி பட்டியலில் குறிப்பிட்டுள்ள ரூ.234/— அடிப்படையில் நிர்ணயம் செய்து பணி மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். 15 DBC பணியாளர்களை 15.03.2017 முதல் நான்கு மாதங்களுக்கு நியமனம் செய்து டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவு தொகை ரூ.4.00 லட்சத்திற்கும் மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>**1.** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 5386/2014/எச் 1. | **தீர்மானம் எண் .104**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 31.03.2017 | **<u>பொருள் எண் –6</u>**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுக்கும் பணிக்கு தண்ணீர் சேகரிக்கும் தொட்டிகளில் ஊற்றப்படும் டெமிபாஸ் 50% EC மருந்து 200 லிட்டர் தமிழ்நாடு அரசு மருந்துகள் சேவை கழகத்தில் அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கி வழங்கலாம். உத்தேச செலவு | **தீர்மானம் எண் .105**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தொகை ரூ.1,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 524/2017/எச் 1. | |
| 31.03.2017 | <u>பொருள் எண் –7</u><br>இந்நகராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் அ.ஜெயராஜ் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக சொந்த ஊரான தாராபுரம் நகராட்சிக்கு பணிமாறுதல் செய்யக்கோரி விண்ணபப்பத்ததின் அடிப்படையில் தனியரை தாராபுரம் நகராட்சியில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பணியிட மாறுதல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண் .106<br>அனுமதிக்கப்பட்டது. |
| 31.03.2017 | <u>பொருள் எண் –8</u><br>மணப்பாறை நகராட்சியில் 01.10.1996க்குப் பிறகு தினக்கூலி பணியாளராக பணிபுரிந்து, பணி நீக்கம் செய்யப்பட்ட திரு.காசிநாதன் மற்றும் ஆறு நபர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். WP No.40923 முதல் 40929 / 2006 க்கு சென்னை உயர்நீதிமன்றம் 27.10.2010 ஆம் தேதியன்று அளித்த தீர்ப்பின் மீது மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அரசு வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு கோரப்பட்டு அதனடிப்படையிலும், நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் அவர்களின் 05.01.2011 ஆம் தேதிய கடிதத்தின் படி, சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து தினக்கூலி பணியாளர்கள் 5 நபர்கள் நீதிமன்ற தீர்ப்பின் மீது அவமதிப்பு வழக்கு 768, 769, 770, 771, 772/2016 பெறப்பட்டுள்ளதாக திருமதி.கவிதா அரசு வழக்கறிஞர் அவர்களிடமிருந்து 14.03.2016 அன்று விசாரணைக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக சட்ட ஆலோசகர் சென்னை அவர்களின் ஆலோசனை படி அவர்கள் தெரிவித்த மேற்கண்ட உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளுக்கு அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.எஸ்.வி.துரைசோலைமலை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு மேல்முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br>திரு.எஸ்.வி.துரைசோலைமலை, சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் அவர்களின் கடிதத்தின்படி மேற்கண்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அரசு செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோர் உள்ளதால் அவர்களின் சார்பாக ஆஜராக சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் அட்வகேட் ஜெனரல்–III, திரு.எஸ்.கோமதிநாயகம் அவர்கள் நியமிக்கப்பட்டது. கீழ்க்கண்டவாறு திரு.எஸ்.கோமதிநாயகம் , கூடுதல் அட்வகேட் ஜெனரல் மற்றும் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.எஸ்.வி.துரைசோலைமலை ஆகியோருக்கு வழக்கு கட்டணம் வழங்கப்பட்டுள்ளது. கட்டணம் வழங்கியதை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. திரு.எஸ்.கோமதிநாயகம், கூடுதல் அட்வகேட் ஜெனரல் – III – ரூ.17.50 லட்சம்<br>2. திரு.எஸ்.வி துரைசோலைமலை கூடுதல் அரசு வழக்கறிஞர் – ரூ.2.00 லட்சம்<br><u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண் .107<br>அலுவலககுறிப்பு ஏற்று<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>31.03.2017</td>
<td><u>பொருள் எண் –9</u><br>இந்நகராட்சி பணியாளர்கள் 2017 – 18 ஆம் ஆண்டு அலுவலக வேலை காரணமாக வெளியூர் பயணம் சென்று வந்தமைக்கு வழங்க பயணப்பட்டியலுக்கு வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியிலிருந்து செலனித்தை மேற்கொள்ளலாம்</td>
<td>தீர்மானம் எண் .108<br>அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>31.03.2017</td>
<td><u>பொருள் எண் –10</u><br>இந்நகராட்சியில் 2017 – 18 ம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்குத் தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கணினி சேவை மையத்திற்குத் தேவையான ரசீதுகள் டோனர், பிரிண்டிங் ரிப்பன், ஹ4 பேப்பர், ஹ3 பேப்பர், காப்பியர் பேப்பர் மற்றும் டோனர் சுநகடைட செய்யவும் உத்தேச செலவினம் ரூ.10.00 ( பத்து லட்சம்) – க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியிலிருந்து செலனித்தை மேற்கொள்ளலாம்</td>
<td>தீர்மானம் எண் .109<br>அலுவலககுறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>31.03.2017</td>
<td><u>பொருள் எண் –11</u><br>இந்நகராட்சி பொது நிதி 2016–2017 ஆம் ஆண்டு நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு 24.02.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>ஒப்பந்தாரரின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td rowspan="2">பேருந்து நிலைய நுழைவு மற்றும் வெளியேறும் வாயிலில் சிறுபாலம் மற்றும் ரேம்பு அமைக்கும் பணி</td><td rowspan="2">10.00</td><td>திரு. பி.கோபால்</td><td>0.13% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s.Arumugam &Co</td><td>0.02% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் M/s.Arumugam &Co என்பவர் 0.02% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்துபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே இந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> –<br>அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண் .110<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.03.2017</td>
<td>

**<u>பொருள் எண் –12</u>**

இந்நகராட்சி பொது நிதி **2016–2017** ஆம் ஆண்டு நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு **24.02.2017** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய நுழைவு மற்றும் வெளியேறும் வாயிலில் வளைவு அமைக்கும் பணி | 10.00 | திரு. பி.கோபால் | 2.39% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு |
| 2 | | | M/s.Arumugam &Co | 0.01% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் M/s.Arumugam &Co என்பவர் **0.01%** மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்தபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே இந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> –

அனுமதிக்கலாம்.

</td>
<td>

**தீர்மானம் எண் .111 அனுமதிக்கப்பட்டது.**

</td>
</tr>
<tr>
<td>31.03.2017</td>
<td>

**<u>பொருள் எண் –13</u>**

இந்நகராட்சி பொது நிதி **2016–2017** ஆம் ஆண்டு நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு **24.02.2017** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் முன்புறம் உள்ள திறந்த வெளியில் மெச்சிகன் புல்வெளி அமைத்து சுற்றி செடிகள் நட்டு பூஙகா பராமரிப்பு பணி மற்றும் பேருந்து நிலைய OTS பகுதியில் கலர் சீட் அமைக்கும் பணி. | 10.00 | திரு. பி.கோபால் | 4.02% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு |
| 2 | | | M/s.Arumugam &Co | 0.04% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் M/s.Arumugam &Co என்பவர் **0.04%** மதிப்பீட்டு

</td>
<td>

**தீர்மானம் எண் .112 அனுமதிக்கப்பட்டது.**

</td>
</tr>
</table>

விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்தபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே இந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

---

31.03.2017

**பொருள் எண் –14**

இந்நகராட்சி பொது நிதி 2016–2017 ஆம் ஆண்டு நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு 24.02.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தாரரின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட திருச்சி–திண்டுக்கல் மெயின் சாலையின் பிரிவிலிருந்து செவலூர் செல்லும் சாலையில் விடுபட்ட பகுதிக்கு புதிதாக தார் சாலை அமைக்கும் பணி | 5.00 | திரு. கே.செல்வராஜ் | 0.53% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு |
| 2 | | | திரு. எ.பாலசுப்ரமணியன் | 0.11% மதிப்பீட்டு விலை விகித்தை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு. எ.பாலசுப்ரமணியன் என்பவர் 0.11% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்தபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே இந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் .113**
**அனுமதிக்கப்பட்டது.**

---

31.03.2017

**பொருள் எண் –15**

இந்நகராட்சிக்கு சொந்தமான அலுவலக ஈப்பு எண்.TN 45 Bz 7050 வாகனத்தில் உள்ள பழுதுகளை அவசர அவசியம் கருதி சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ.11,000/–ஐ வருவாய் நிதியிலிருந்து செலவுசெய்ய பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதிபெற்று வேலை உத்திரவு வழஙகியதையும் தொகை ரூ.10283/– வழஙகியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதையும் , தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் .114**
**அலுவலக குறிப்பு ஏற்று**
**அனுமதிக்கப்பட்டது.**

---

31.03.2017

**பொருள் எண் –16**

இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி எண்.TN 45 L 7670க்கு தகுதி சான்று 15.04.2017 டுடன் முடிவடைவதால் 2016–2017 ஆம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு கீழ்க்கண்ட பழுதுகள் சரிசெய்ய உப்பிலியபுரம் அக்ரோ லிமிடெட் மூலம் பணிமேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.1,17,000/–ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு

**தீர்மானம் எண் .115**
**அனுமதிக்கப்பட்டது.**

| வ.எண் | பழுகள் விபரம் |
|---|---|
| 1 | நான்குவீல் கழற்றி பேரிங் புதியது மாற்றி கிரீஸ் அடித்து பிரேக் சரிசெய்தல் |
| 2 | இன்ஜின் ஆயில்பில்டர் டீசல் பில்டர் மாற்றி புதிய ஆயில் மாற்றி சர்வீஸ்செய்தல் |
| 3 | கிளர்ட்சி பிளேட் மேகிட்டு கீகிட்டு அசெம்பிள் புதியது மாற்றுதல் |
| 4 | லூாரிபட்டை உடைந்ததை எடுத்துவிட்டு புதியது மாற்றி டெம்பர்அடித்து சர்வீஸ்செய்தல் |
| 5 | சென்டர் ஜாயின்ட் ஸ்டார்கள் மாற்றி சர்வீஸ் செய்தல் |
| 6 | கியர் கிரௌன் ஆயில் புதியது மாற்றி சர்வீஸ் செய்தல் |
| 7 | செல்ப்மோட்டார் டைனமோ சர்வீஸ் செய்து புதியதாக எலக்ட்ரிக்வயரிங சரி செய்தல் |
| 8 | சைடு இரண்டு டோர்பூட்டு திறக்குமாறு செய்து டிங்கர்வேலை செய்தல் |
| 9 | புதிய ரேடியேட்டர் மாற்றுதல் |
| 10 | லாரி வாட்டர் சர்வீஸ்செய்து பெயிண்ட் அடித்து வேலை செய்தல் |
| 11 | தண்ணீர் டேங் வால்வு உடைந்து உள்ளதை சரிசெய்தல் |
| 12 | லாரி சேஸ் பழுதடைந்துள்ளதை சரிசெய்தல் |

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம்.

---

31.03.2017

<u>பொருள் எண் –17</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான திருச்சிரோடு ஒருவழிப்பாதை புதிய வணிக வளாக கடை எண் 4 பொது ஏலம் கோரியதில் 24.11.2016 கீழ்க்கண்டவாறு ஓலம் கோரப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏல இனம் | ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.A.ஜோசப் ராஜன்,<br>260 அண்ணாநகர்,<br>மணப்பாறை | திருச்சி ரோடு<br>ஒருவழிப் பாதை<br>கடை | ரூ.2950/– |
| 2. | திரு. S.ஆரோக்கியம்,<br>வடக்குத் தெரு,<br>மணப்பாறை | | ரூ.3000/– |

மேற்கண்ட திரு. S.ஜோசப்ராஜன், ரூ.2950/– க்கும், திரு. S.ஆரோக்கியம், ரூ.3000/–க்கும் ஏலம் கோரியுள்ளார். ஏற்கனவே மேற்கண்ட கடை ஏற்கனவே விடப்பட்ட தொகையை விட குறைவாக உள்ளதால் 24.08.2015 ம் தேதியன்று பொது ஏலத்தில் திரு. ஆர்.ரத்தினப்பன் என்பவர் ரூ.10,000/–க்கும், திரு.எஸ்.இலக்கையா என்பவர் ரூ.10,000/– க்கும் ஏலம் கோரியுள்ளார். மேற்படி கடை எண் 4 ஐ மறு ஏலம் கோரலாம்.

<u>அலுவலக குறிப்பு –</u> அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் .116**
**அனுமதிக்கப்பட்டது.**

---

31.03.2017

<u>பொருள் எண் –18</u>

மணப்பாறை நகராட்சிக்குச் சொந்தமான எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ரூ.55.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண் 5, நாள்– 04.08.2014 ன் படி லையன்ஸ் சங்கம் மணப்பாறைக்கு தமிழ்நாடு அரசு ஆணை எண்.228, நகராட்சி நிர்வாகம்

**தீர்மானம் எண் .117**
**அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td></td>
<td>மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்– 13.11.2008ல் வழங்கியுள்ள உத்திரவு மற்றும் நிபந்தனைகளுடன் அக்டோபர் –2015 முதல் தலைவர் லையன்ஸ் சங்கம் , மணப்பாறை அவர்களால் பராமரிக்கப்பட்டு வரப்பட்டது. பின்னர் சில கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி 28.01.2017 தேதி முதல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு 29.01.2017 நகராட்சியால் முதல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. லையன்ஸ் சங்க தலைவரின் வேண்டுகோளை ஏற்று குறைபாடுகள் சரிசெய்யப்பட்டு, பொதுமக்கள் அறியும் வண்ணம் நிபந்தனைகள் குறித்த டிஜிட்டல் பேனர் வைக்கப்பட்டுள்ளது.<br>
எனவே 20.03.2017 ம் தேதிய தலைவர் லையன்ஸ் சங்கம் மணப்பாறை அவர்களின் விண்ணப்பத்தினை ஏற்று 01.04.2017 முதல் மீண்டும் அன்னவர் வசம் அரசு ஆணை மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின் படி நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகன மேடையை பராமரிக்க ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> –<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. அரசு ஆணை மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின் படி பராமரிக்க உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.03.2017</td>
<td><u>பொருள் எண் –19</u><br>
இந்நகராட்சி குடிநீர் நிதி 2016–2017 ஆம் ஆண்டு நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு 14.03.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>ஒப்பந்தாரரின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td rowspan="2">இந்நகராட்சி எல்லையில் அமைந்துள்ள மினி பவர் பம்ப், ஆழ்துளை அடிபம்பு, பகிர்மானக்குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்யும் பணி</td><td rowspan="2">5.00</td><td>திரு. கே. ராமசாமி</td><td>0.2 % மதிப்பீட்டு வி விகித்தை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. பி.கோபால்</td><td>1.2 % மதிப்பீட்டு வி விகித்தை விட குறைவு</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு. கே.ராமசாமி என்பவர் 0.2 % மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்தபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே இந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண் .118<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>31.03.2017</td>
<td><u>பொருள் எண் –20</u><br>
இந்நகராட்சியில் 2016 – 17 ம் நிதியாண்டிற்கு வசூல் பணியை தீவிரப்படுத்தும் பொருட்டும் 100% வரி வசூல் இலக்கு எய்திடவும் வரி இனங்கள் வசூல் பணிக்காகவும், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவுபடியும் நகரிலுள்ள வீடுகள் மற்றும் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றவும் 27 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய</td>
<td>தீர்மானம் எண் .119<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | உத்தேச செலவினம் ரூ.0.75 (ஒரு லட்சம்) க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u> –**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். | |
| 31.03.2017 | **<u>பொருள் எண் –21</u>**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்யும் பணிக்கு பகவதி ஏஜென்சீஸ் மன்னார்குடி அவர்களுக்கு 31.07.2015ன் ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் பணியை மேற்கொள்ள கால நீட்டிப்பு மார்ச் 2017–வுடன் முடிவடைந்துவிட்டதால் ஏப்ரல் – 2017 முதல் ஆகஸ்ட்–2017 வரை அதற்காகும் செலவினம் ரூ.9.60 லட்சத்திற்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u> –**<br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண் .120**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 31.03.2017 | **<u>பொருள் எண் –22</u>**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் கட்டுப்படுத்த கொசுப்புழுக்கள் உருவாகும் இடங்கள் அழித்தல், அபேட் மருந்து கரைசல் ஊற்றுதல், முதிர் கொசுக்கள் ஒழிக்கும் புகை மருந்து அடித்தல் முதலிய பணிகளை மேற்கொள்ள துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள், திருச்சி அவர்கள் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக தினக்கூலி பட்டியலில் குறிப்பிட்டுள்ள ரூ.234/– அடிப்படையில் நிர்ணயம் செய்து பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி 20 DBC பணியாளர்களை 12.04.2017 முதல் நான்கு மாதங்களுக்கு நியமனம் செய்து டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ளவும், உத்தேச செலவுத் தொகை ரூ.6.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u> –**<br>1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br><br>ந.க.எண் 4562/2014/எச்1 | **தீர்மானம் எண் .121**<br>**அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.** |

தனி அலுவலர்
மணப்பாரை நகராட்சி